**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண். 3/2017</u>

நாள் 4.1.2023

<u>பெயர். சரவணன் த/பெ. தேவேந்திரன்</u>

<u>வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. வழக்கு சொத்து வித்துவாந்தாங்கல் கிராமத்தில் அமைந்துள்ளது. வழக்கு சொத்திற்கு பக்கத்திலோ அல்லது அருகாமையிலோ கூட்டுகுடும்ப என்னென்ன அமைந்துள்ளது என்றால் கூட்டுகுடும்ப சொத்து எதுவும் இல்லை. எனது உறவினர்களது தான் இருக்கிறது. உறவினர்கள் சொத்து யாருடையது என்றால் இருப்பவர்கள் எல்லாம் என் உறவினர்கள் தான் அவர்கள் சொத்து ஆகும். வழக்கு சொத்தீற்கு பக்கத்தில் ராஜேந்திரன் என்பவரின் நிலம் உள்ளது அது மட்டும் தான் எனக்கு நினைவுள்ளது. ராஜேந்திரன் என் அம்மாவின் தம்பிமுறை உறவுக்காரர் ஆவார்.

2. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் என் தந்தையின் உடன் பிறந்தவர்க்கு ஏதேனும் சொத்து இருக்கிறதா என்றால் பக்கத்தில் இல்லை வித்துவாந்தாங்கல் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்திற்கும் எனது குடும்ப சொத்திற்கும் என் தந்தையின் மூதாதையர் பெயரில் ஆவணம் இருந்ததற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

3. வழக்கு சொத்து எனக்கு சுமாராக 40 வருடங்களாக உரிமை ஆகும். வில்லங்க சான்றிதழ் தவிர்த்து வேறு ஏதேனும் ஆவணங்கள் வழக்கு சொத்தை 40 வருடங்களாக அனுபவித்து வருவதற்கு இருக்கிறதா என்றால் இல்லை. எனக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுக்கும் போது சொத்தின் ஜக்பந்திகள் என்ன இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் அந்த இடத்தை வாரத்திற்கு ஒருமுறை பார்த்துவிட்டு தான் வருகிறேன். அந்த இடத்தில் வீடு இருந்தது ஒரு 7,8 வருடங்களுக்கு முன்பாக இடிந்து விழுந்துவிட்டது.

4. இன்றைய தேதியில் 20 வருடங்களுக்கு முன்பாக என் தந்தை வசித்து வந்தார் அதன் பிறகு நாங்கள் சேவூர் கிராமத்திற்கு சென்றுவிட்டதால் அவ்வப்போது சென்று அந்த வீட்டை பராமரித்து வந்தோம். தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதும்போது சுற்றி பார்த்து தான் ஜக்பந்தி எழுதினோம் அப்போது வழி விடுபட்டுவிட்டது அதனால் 2018ல் திருத்தல் பத்திரம் பதிவு செய்து கொண்டோம்.

5. தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் துரைசாமி வீடு என குறிப்பிட்டு இருந்த இடத்தை தான் திருத்தல் பத்திரத்தில் வழி என்று மாற்றி உள்ளேன் என்றால் தான செட்டில் மென்ட் பத்திரத்தில் துரைசாமி வீடு இருந்ததா என்று எனக்கு ஞாபகமில்லை. தானசெட்டில் மென்ட் பத்திரத்தில் வடக்கு எல்லையாக குறிப்பிட்டுள்ள துரைசாமி வீடு என்பதுபோல் ஒரு நபர் இருக்கிறாரா என்றால் சுற்றி காலிமனையாக உள்ளது ஒரு விடு மட்டும் உள்ளது அதில் துரைசாமி இருக்கிறாரா இல்லையா என்று எனக்கு தெரியாது.

6. எனக்கு சிறுவயதில் இருந்தே வழக்குசொத்தில் வழி இருக்கும் விவரம் தெரியும். தாவா சொத்து வித்துவாந்தாங்கல் கிராமத்தில் பஜனை கோயில் தெருவில் அமைந்துள்ளது. 20 வருடங்களுக்கு முன்பாக என் தந்தை வசித்து வந்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒரு வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன், வேறு வீட்டுவரி ரசீது எதுவும் இல்லை. தான செட்டில் மென்ட் பதிதிரம் எழுதும்போது சொத்தானது காலிமனையாக இருந்தது.

7. வீடு இருக்கும் போது அதன் கதவு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. தான செட்டில் மென்ட் பத்திரத்தில் கிழக்கு மேற்கு 28 அடி வடக்கு தெற்கு 18 அடி என குறிப்பிட்டுஎழுதி இருப்பதே தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லும் பொது வழி என்பது பஜனைகோயில் தெருவில் மேற்கில் இருந்து கிழக்காக செல்லும் பொது வழி என்றால் சரிதான். அவ்வாறு கிழக்காக செல்லும்போது அதன் கடைசியீல் பிரதான சாலை இருக்கிறது என்றால் சரிதான்.

8. மேற்படி பஜனை கோயில் தெருவில் இருந்து செல்லும் பொது வழியில் அமைந்துள்ள காலிமனை அனைத்தும் வடக்கு பார்த்ததுபோல் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த மனைகள் அனைத்தும் வடக்கு தெற்கு 33 அடி யும் கிழக்கு மேற்கு 15 அடியும் கொண்ட 5 வீட்டுமனைகள் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி 5 வீட்டுமனைகளில் முதல் மனையே என் வீட்டு மனைஆகும். நான் மீதி உள்ள மனைகளின் எந்தவித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான்.

9. நான் பிரதிவாதியின் 2ஆவது வீட்டு மனையில் எந்தவித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டு மனைகளில் எனக்கும் என் மூதாதையருக்கும் எந்தவிதமான சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 5 மனைகளில் ஒரு மனை கோபால் நாயுடு என்பவருக்கு ஒரு மனையும், அண்ணாமலை பிள்ளை என்பவருக்கு 2 மற்றும் 5 ஆவது மனை அவருக்கும் உரிமையானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. அண்ணாமலை பிள்ளை 2 மற்றும் 5 ஆவது மனையை அண்ணாமலை பிள்ளை என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. 4ஆவது வீட்டு மனையை 2ம் பிரதிவாதியின் கணவரான ஜெயராமன் என்பவர் கிரயம் வாங்கி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயராமன் அவ்வாறு கிரயம் வாங்கும் போது ஜெயராமன் மனனக்கு மேற்கு என்றே சொத்து விவரத்தில் காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல.

11. 2 மற்றும் 5 வீட்டுமனைகள் அண்ணாமலைபிள்ளைக்கு முன்பாக கோவிந்தசாமி பிள்ளை கிரயம் வாங்கி இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எனக்கு உரிமை இல்லை என்றாலும் எந் தந்தை சில காலம் வழக்கு சொத்து அமைந்துள்ள ஊரில் இருந்ததால் தவறான பெயரில் என் தந்தை பெயரில் பட்டா வாங்க கொண்டார் என்றாலும் ஜெயராமன் சென்னையில் வசித்து வருவதால் மேற்படி பட்டாவை என் தந்தை வாங்கி விட்டார் என்றாலும் சரியல்ல.

12. வா.சா.ஆ.1 ல் சொல்லி உள்ள வீட்டு மனை போல் எதுவும் வழக்கு சொத்தில் இல்லை என்றாலும் நான் தவறான தகவலை கூறி வருவாய் துறையில் இருந்து பட்டா பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி எந் தந்தை பெயரில கொடுத்த பட்டாவை ரத்து செய்ய கோரி 7.3.2016ம் தேதி அன்று செய்யார் துணை ஆட்சியரிடம் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். 13.2.2016ம் தேதி அன்று என் தந்தை மற்றும் தாயார் பெயரில் போலீசில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சாதான்.

13. பிரதிவாதிகள் என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை தொடர்ந்து முயறற்சி செய்தபோது என் பெயரில் ஒரு தான செட்டில்மென்ட் பத்திரத்தை உருவாக்கினார்கள் என்றால் சரிதான். வருவாய் துறையினர் என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை மாற்ற தயாராக இருந்தபோது அதை தடுக்க வேண்டும் என்பதற்காக இவ்வசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை வைத்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.
(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.